## 2.4 1999–2000 – ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் முதற்கட்டமாக ரூ.35.00 இலட்சம் ஒதுக்குதல் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.75 நாள் : 15.04.1999

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண்.98, ஊரக வளர்ச்சி, நாள்.21.05.1998
2. அரசு ஆணை (நிலை) எண்.99, ஊரக வளர்ச்சி,நாள்.21.05.1998
3. அரசு கடித எண்.21804/மதி1/98–1, ஊரக வளர்ச்சி, நாள்.23.06.1998

**ஆணை**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 1997–98ம் வருடம் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களின் தொகுதிகளை மேம்படுத்துவதற்கு ஒரு தொகுதிக்கு ரூ.25 இலட்சம் வீதம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1998–99ம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ஒரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கான நிதி ரூ.35 இலட்சம் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் உயர்த்தப்பட்டது. 17.03.1999 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 1999–2000 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பத்தி 19ல் கீழ்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

> "19 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தலா ரூ.35 இலட்சம் வீதம் நடப்பு நிதி ஆண்டில் சாலைகள், பாலங்கள், கல்வி நிலையங்கள், போன்ற 6,389 பணிகள் ரூ.82.25 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன, இத்திட்டத்திற்கு, வரும் நிதியாண்டில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கும் ரூ.50 இலட்சம் ஒதுக்கப்படும்."

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க ஒவ்வொரு தொகுதிக்கும் முதற்கட்டமாக, ரூ.35 இலட்சம் (ரூபாய் முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) வீதம் 235 தொகுதிகளுக்கும் ரூ.82.25/– (ரூபாய் எண்பத்தி இரண்டு கோடியே இருபத்தைந்து இலட்சம் மட்டும்) இணைப்பு–1ல் உள்ளவாறு ஒதுக்கி ஆணையிடப்படுகிறது.

3. முன்பத்தி 2–ல் தற்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள நிதியன்றி, மீதியுள்ள நிதி ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒதுக்கப்பட்டு ஆணை தனியே வெளியிடப்படும்.

4. சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் தற்பொழுது முதற்கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.35 இலட்சம் (ரூபாய் முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கும் பணிகளை நிறைவேற்றுவதற்கு சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கு சென்னை மாநகராட்சி ஆணையரிடமும், மற்ற அனைத்து மாவட்டங்களில்அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் இந்த நிதி வழங்கப்படும்.

5. நிதியைப் பெற்று வழங்குவதற்கான அதிகாரம் :

இந்த நிதியை சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பெற்று வழங்குவதற்கும், பொது வைப்பு நிதியின் கீழ் (Public Deposit Account) பற்று வைப்பதற்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட துறைகளுக்கு சென்னை மாநகராட்சி ஆணையரும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் இரு தவணைகளில் நிதியை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6. பணிகளுக்கான நிதி ஒதுக்கீடும், தேர்வும் :

(அ) ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் கணினி பாடத்திட்டத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு,அவர்களது தொகுதியில், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இதற்கான வசதிகளுக்காக மூன்று பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ.12/– இலட்சமும் (ரூபாய் பன்னிரெண்டு இலட்சம் மட்டும்) (ரூ.4 இலட்சம் ஒ 3 கட்டிடங்கள்) மற்றும் ரூ.13 இலட்சத்தை (ரூபாய் பதிமூன்று இலட்சம் மட்டும்) தார்சாலைகள், நடைபாதைகளை சரிசெய்வதற்காகவும், சந்துக்களுக்கு சாலைகள் அமைப்பதற்காகவும் ஒதுக்கவேண்டும். இந்தப் பணிகளை சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தேர்வு செய்து சென்னை மாநகராட்சி ஆணையருக்கோ அல்லது சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அவரது தொகுதியில் மேற்குறிப்பிட்டுள்ள ரூ.25இலட்சம் அன்றி மீதியுள்ள நிதியான ரூ.25 இலட்சத்தை (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) மேற்கண்ட பணிகளுக்காகவோ அல்லது வேறு பணிகளுக்காகவோ அவர் விரும்பும்படி பரிந்துரைக்கலாம்.

(இ) இவ்வாறு சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினரால் தேர்வு செய்யப்பட்ட பணிகளை சென்னை மாநகராட்சி ஆணையரும் மற்ற மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களும் திட்டத்தை இணைந்து செயல்படுத்தும் துறைகள் மூலம் செய்ய வேண்டும்.

(ஈ) சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திங்டடத்தில் தேர்வு செய்யக்கூடாத பணிகள் இணைப்பு –IIல் சேர்க்கப்பட்டுள்ளது.

7. நிதியைப் பெற்றுக் கொள்ளல் ,திட்டப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்தல்.

இத்திட்டத்திற்கு அரசு விடுவிக்கும் தொகை கீழ்கண்ட விதிமுறைகளின்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் (சென்னை நீங்கலாக) சென்னை மாநகராட்சி ஆணையருக்கும் பணிகளை செய்து முடிக்க வழங்கப்படும்.

(i) ஒரு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி, ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் இருக்குமானால், அந்தந்த மாவட்டங்களில் உள்ள கிராமங்களுக்கு எந்த அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர் பணியினை தேர்வு செய்கின்றாரோ அந்த அளவிற்கான தொகையினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பிரித்து வழங்குவார்.

(ii) திட்ட செயல்பாடு.

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையரால் ஒப்பளிக்கப்பட்ட ஊரக மற்றும் நகர்ப்புற திட்டங்கள் ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள் துறை, பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, பேரூராட்சிகள் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம் போன்ற துறைகள் மூலம் செயல்படுத்தப்படும்.

(iii) ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல்.

அனைத்துப் பணிகளும் பகிரங்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அரசு விதிமுறைகளின்படி அந்தந்த துறைகள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் அரசுக்கு அறிக்கை அனுப்புதல், கணக்கு மற்றும் தணிக்கை முறைகள் போன்றவற்றை கடைபிடிப்பதற்காக மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்டத்திற்கான வழிமுறைகள் திட்டப் பணிக்கான உச்ச வரம்பு ரூ.10 இலட்சம் நீங்கலாக மற்ற வழிமுறைகளை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டிற்கும் பின்பற்றப்படவேண்டும்.

(iv) காலஅட்டவணை

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிகளை நிறைவேற்றுவதற்கு கீழ்கண்ட கால அட்டவணை பின்பற்றப்படவேண்டும்.

| வ. எண் | நடவடிக்கைகள் | குறிப்பிட்ட தேதியிலோ அல்லது அதற்கு முன்போ |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களால் இறுதியான பணிகளின் பட்டியல் சென்னை மாநகராட்சி ஆணையருக்கோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கோ அளிக்கப்பட வேண்டிய நாள் | 31.05.1999 |
| 2. | நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ஒப்பளிப்பு அளிக்கப்படவேண்டிய நாள் | 30.06.1999 |
| 3. | பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கப்பட வேண்டிய நாள் | 15.07.1999 |
| 4. | பணிகள்துவக்கப்படவேண்டிய நாள் | 30.07.1999 |
| 5. | பணிகள் முழுமையாக முடிக்கப்பட வேண்டிய நாள் | 31.03.2000 |

(v) திட்டப் பணிகளை ஆய்வு செய்தலும், மேற்பார்வையிடுதலும்.

ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளே கண்காணிக்கும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படும் திட்டத்தை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் கண்காணிப்பார். இத்திட்ட செயல்பாடு குறித்த மாதாந்திர அறிக்கையை மாவட்ட ஆட்சியர் அடுத்து வரும் மாதங்களில் 5–ம் நாளுக்குள் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பி வைப்பார். மேலும், துறைத்தலைவர்களும், ஊரக வளர்ச்சித் துறையைச் சேர்ந்த அலுவலர்களும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு மாதாந்திர அறிக்கையை அடுத்து வரும் மாதங்களில் 5–ம் நாளுக்குள் அனுப்பி வைக்க வேண்டும். ஊரக வளர்ச்சி முகமையைச் சேர்ந்த அரசு அலுவலர்களும், ஊரக வளர்ச்சி இயக்குநரும், ஊரக வளர்ச்சித் துறை அரசுச் செயலரும் இத்திட்டச் செயல்பாட்டை பார்வையிட்டு அவ்வப்போது ஆய்வு செய்வார்கள்.

(vi) மேற்பார்வையிடுதல் மற்றும் துறைக்கான செலவு (சென்டேஜ் செலவு)

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் கட்டிட மையம் போன்ற துறைகள் மேற்கொள்ளும் பணிகளுக்கு மேற்பார்வையிடுதல் செலவு மற்றும் கட்டணச் செலவு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணியினுள் அடங்கும். அரசுத் துறைகளான பொதுப்பணித்துறை. நெடுஞ்சாலைத்துறை மற்றும் ஊரகப் பணித் துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, பேரூராட்சித் துறை போன்றவைகளுக்கு மேற்பார்வையிடுதல் செலவு மற்றும் கட்டணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

(vii) மாவட்ட அளவிலான தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு அதிகாரம்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிகளை செயல்படுத்துவதற்காக மாவட்ட அளவிலான தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு, இப்பணிகளுக்காக தொழில்நுட்ப ஒப்பளிப்பு அளிப்பதற்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இந்த தொழில்நுட்ப ஒப்பளிப்புக்காக மாவட்ட அளவிலான தொழில்நுட்ப அதிகாரிகள் மாவட்டத்திற்கு வெளியில் உள்ள உயர் அதிகாரிகளை கலந்தாலோசிக்க வேண்டியதில்லை.

(viii) பொது.

கணக்கு மற்றும் தணிக்கை மேற்பார்வை மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு அரசாணை (நிலை) எண்.148, திட்டம் மற்றும் வளர்ச்சி (மாதி) துறை, நாள்.27.08.1993 மற்றும் அரசாணை (நிலை)எண்.105, திட்டம் மற்றும்வளர்ச்சி(மாதி) துறை நாள்,22.08.1995 ஆகிய அரசு ஆணைகளில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**8.** முன்பத்தி இரண்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> “ 2515–00– ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள்–800 ஏனைய செலவு – ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II–மாநில திட்டம்–JV–சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏனைய திட்டங்கள் செயல்படுத்துதல்–09–உதவி மானியங்கள்.”
> (கு.தொ.கு.2515 00 800 JV 0909)

**9.** இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.78/DS(B)/99/நாள்.15.04.1999 ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

## 2. MLACDS

**இணைப்பு–1**

ஊரக வளர்ச்சித்துறையின் அரசாணை (நிலை) எண்.75 நாள்.15.04.1999 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

மாவட்ட வாரியான முதற்கட்ட நிதி ஒதுக்கீடு

| வ.எண். | மாவட்டத்தின் பெயர் | மொத்த சட்டமன்றத் தொகுதிகள் | மாவட்டத்திற்காக ஒதுக்கப்படும் மொத்த நிதி முதற்கட்டம் (1999–2000) (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | சென்னை (நியமிக்கப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினரையும் சேர்த்து) | 15 (14+1) | 525 |
| 2. | காஞ்சிபுரம் | 9 | 315 |
| 3. | திருவள்ளூர் | 8 | 280 |
| 4. | கடலூர் | 9 | 315 |
| 5. | விழுப்புரம் | 12 | 420 |
| 6. | வேலூர் | 12 | 420 |
| 7. | திருவண்ணாமலை | 9 | 315 |
| 8. | சேலம் | 12 | 420 |
| 9. | நாமக்கல் | 5 | 175 |
| 10. | தர்மபுரி | 10 | 350 |
| 11. | ஈரோடு | 11 | 385 |
| 12. | கோயம்புத்தூர் | 14 | 490 |
| 13. | நீலகிரி | 3 | 105 |
| 14. | தஞ்சாவூர் | 9 | 315 |
| 15. | நாகப்பட்டினம் | 6 | 210 |
| 16. | திருவாரூர் | 5 | 175 |
| 17. | திருச்சிராப்பள்ளி | 9 | 315 |
| 18. | கரூர் | 4 | 140 |
| 19. | பெரம்பலூர் | 5 | 175 |
| 20. | புதுக்கோட்டை | 5 | 175 |
| 21. | மதுரை | 10 | 350 |
| 22. | தேனி | 5 | 175 |
| 23. | திண்டுக்கல் | 7 | 245 |
| 24. | இராமநாதபுரம் | 5 | 175 |
| 25. | விருதுநகர் | 6 | 210 |
| 26. | சிவகங்கை | 5 | 175 |
| 27. | தூத்துக்குடி | 7 | 245 |
| 28. | திருநெல்வேலி | 11 | 385 |
| 29. | கன்னியாகுமரி | 7 | 245 |
| | மொத்தம் | 235 | 8225 |

## இணைப்பு–II

(அரசாணை(நிலை) எண்.75, ஊரக வளர்ச்சித்துறை, நாள்.15.04.1999)

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்(1999–2000)கீழ் தேர்வு செய்யக்கூடாத பணிகள்.

1. மத்திய, மாநில அரசுகளின் அலுவலகங்களுக்கும், அரசுத் துறைகள், முகமைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் அலுவலகங்களுக்கும் பணியாளர் குடியிருப்புகளுக்கும் கட்டிடம் கட்டுதல்.
2. வணிக நிறுவனங்கள், அறநிறுவனங்கள், பதிவு பெற்ற சங்கங்கள், தனியார் நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவை தொடர்பான வேலைகள் செய்தல்.
3. நீண்டகாலம் பயன்படும் சொத்துக்களை புதுப்பித்தல், தர மேம்பாடு செய்தல் முதலியவைகளுக்கான சிறப்பு பழுது பார்த்தல் பணிநீங்கலாக மற்ற பொது பழுது பார்ப்புப் பணிகளையும் நிர்வாக பணிகளையும் மேற்கொள்ளல்.
4. மானியங்களும், கடன்களும் வழங்குதல்.
5. நினைவுச் சின்னங்களும், நினைவு மண்டபங்களும் கட்டுதல்.
6. இருப்பு செய்யத்தக்க எந்தவிதமான பொருட்களையும் வாங்குதல்.
7. நில எடுப்புக்கும், நில எடுப்புக்கு இழப்பீடு வழங்குவதற்கும் செலவிடல்.
8. அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்களின் ஒரு பகுதியாக அமைவது நீங்கலாக தனிப்பட்ட ஒருவருக்கு ஆதாயம் அளிக்கக் கூடிய சொத்துக்களுக்குச் செலவிடல்.
9. மத வழிபாட்டு இடங்களுக்குச் செலவிடல்.